பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 09 2024 ஞாயிற்றுக்கிழமை

7 15 காலை

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி ஜார்கண்ட் மாநிலத்தில் 6 புதிய வந்தேபாரத் ரயில் சேவைகளை இன்று கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.

2. தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

3. விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுடன் வேலைவாய்ப்பை அதிகரிக்கவும் உதவிடும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

4. மேற்குவங்கம், ஒடிசா மற்றும் ஜார்கண்ட் மாநிலங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழை முதல் அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. டைமன் லீக் தடகளப் போட்டியில் ஈட்டி எறிதலில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா வெள்ளிப் பதக்கம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மூன்று நாள் பயணமாக ஜார்கண்ட், குஜராத் மற்றும் ஒடிசா மாநிலங்களுக்கு இன்று புறப்பட்டுச் செல்கிறார்.

ஜார்கண்டில் டாடாநகர் - பட்னா இடையேயான ரயில் சேவை உட்பட 6 புதிய வந்தேபாரத் ரயில் சேவைகளை அவர் இன்று கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.

பின்னர் 660 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேற திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

இதனையடுத்து ஜம்ஷெட்பூரில் நடைபெற உள்ள நிகழ்ச்சியில் பிரதமரின் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு முதல் தவணைத் தொகையை அவர் நாளை விடுவிக்கிறார்.

இது தொடர்பாக ராஞ்சியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ்சிங் சௌஹான், 20 ஆயிரம் பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீடு செய்வதற்கான கடிதங்களை பிரதமர் பயனாளிகளுக்கு வழங்க உள்ளதாகக் கூறினார்.

<<<>>>

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை வலுப்படுத்த தேசிய புலனாய்வு முகமை மற்றும் மாநில தீவிரவாத எதிர்ப்பு அமைப்புகளுக்கு இடையே ஒத்துழைப்பு அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் 2 நாள் தேசிய பாதுகாப்பு உத்திசார் மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய அவர், 2047ஆம் ஆண்டு வளர்ச்சியடைந்த இந்தியா மற்றும் வலுவான எதிர்காலம் என்ற பிரதமரின் தொலைநோக்குப் பார்வையை அடையும் வகையில் மாநில காவல்துறைத் தலைவர்கள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தீவிரவாத செயல்களுக்கான நிதி ஆதாரங்களை தடுப்பது, பாதுகாப்பு திறன்களை மேம்படுத்திக்கொள்வது, சர்வதேச புலனாய்வு முகமைகளுடன் ஒத்துழைப்பது உள்ளிட்ட பல்வேறு தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான விரிவான திட்டத்தை அவர் வெளியிட்டார்.

மாவோயிஸ்ட்களுக்கு எதிரான நடவடிக்கைகள் திருப்தியளிப்பதாக உள்ளது என்று தெரிவித்த அவர், மாநில அரசுகள் தீவிர கண்காணிப்பை உறுதி செய்வதன் மூலம் தீவிரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியும் என்று கூறினார்.

போதைப்பொருள் நடமாட்டம், இணையதள குற்றங்கள் உள்ளிட்ட தேசிய பாதுகாப்பு தொடர்பான விவகாரங்களை எதிர்கொள்வது மிகப்பெரிய சவாலாக உள்ளது என்று திரு. அமித் ஷா குறிப்பிட்டார்.

<<<<>>>>

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுடன் வேலைவாய்ப்பை அதிகரிக்கவும் உதவிடும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவு செய்துள்ள அவர், மத்திய அரசின் இந்த முடிவு, வெங்காயத்திற்கு நல்ல விலை கிடைப்பதையும், ஏற்றுமதி அதிகரிப்பதற்கும் உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே விவசாயிகள் உற்பத்தி செய்யும் வேளாண் பொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கில் ஏற்றுமதி வரி குறைக்கப்பட்டுள்ளதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் தனது கருத்தைப் பதிவிட்டுள்ள அவர், அரசின் இத்தகைய நடவடிக்கைகள் ஏற்றுமதியை அதிகரிக்க உதவிடும் என்று தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்த ஆண்டு நடைபெறும் சர்வதேச திரைப்படத் திருவிழாவின் ஒருபகுதியாக இளம் இயக்குநர்களின் திரைப்படங்களுக்கான பிரிவில் சிறந்த

இந்திய திரைப்படங்களுக்கான விருதும் இடம்பெறும் என்று மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கோவாவில் வரும் நவம்பர் மாதம் 20ஆம் தேதியில் இருந்து 28ஆம் தேதி வரை சர்வதேச திரைப்பட விழா நடைபெற உள்ளது.

இதில் அறிமுக இயக்குநர்களின் திரைப்படங்கள் திரையிடப்பட உள்ளன.

<<<<>>>>

தூர்தர்ஷன் தொலைக்காட்சி சேவை தொடங்கப்பட்டு இன்றுடன் 65 ஆண்டுகள் நிறைவடைகிறது.

1959ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்த தொலைக்காட்சி சேவை, நாட்டின் ஒளிபரப்பு சேவையில் முக்கிய தொடக்கமாக அமைந்தது.

முதல் ஒளிபரப்பு சேவையை முன்னாள் குடியரசுத்தலைவர் திரு. ராஜேந்திரபிரசாத் தொடங்கி வைத்தார்.

அகில இந்திய வானொலியின் ஒரு பகுதியாக இயங்கி வந்த இந்த சேவை, 1976ஆம் ஆண்டு ஏப்ரல் ஒன்றாம் தேதி தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சகத்தின் கீழ் தனித்துறையாக மாற்றப்பட்டது.

பின்னர் இந்த சேவை, பிரசார் பாரதி அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது.

தூர்தர்ஷன் தொலைக்காட்சி சேவைகள் நாட்டின் மிகப்பெரிய தொலைக்காட்சி நிறுவனமாக உருவெடுத்துள்ளது.

இதில் 35 சாட்டிலைட் சேனல்கள், 6 அகில இந்திய சானல்கள் மற்றும் 22 மண்டல ஒளிபரப்பிற்கான சானல்களும் இயங்கி வருகின்றன.

இவை தவிர தூர்தர்ஷன் **DTH** சேவைகள், தூர்தர்ஷன் இலவச ஒளிபரப்பு சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்குவதில் தூர்தர்ஷன் தொலைக்காட்சி சேவைகள் முக்கியப் பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

ஓணம் பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது.

கேரளாவில் அறுவடைத் திருநாளாகவும், மகாபலி மன்னரை வரவேற்பதைக் குறிக்கும் வகையிலும் திருவோண நட்சத்திரத்தில் இந்தப் பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது.

மகாபலி மன்னரை வரவேற்கும் விதமாக 10 நாட்களுக்கு வீடுகளின் முன்பு மக்கள் அத்தப்பூ கோலமிட்டு கொண்டாடுவர்.

ஓணம் பண்டிகையை ஒட்டி அம்மாநிலத்தில் பாரம்பரிய படகுப் போட்டிகளும் நடத்தப்படுகின்றன.

<<<<>>>>

குஜராத் மாநிலம் தேஹாமில் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த 8 பேரின் குடும்பங்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

காந்திநகர் மாவட்டத்தில் உள்ள மேஷோ ஆற்றில் குளிக்கச் சென்றபோது ஆற்றில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிதி உதவியை பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து வழங்க பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

<<<>>>

சுற்றுலாத்துறையில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழகத்தை உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. க. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் குறைந்த செலவில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டு வருவதை சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாத் துறையில் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் சுற்றுலாக் கொள்கை 2023 வடிவமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சென்னையில் உள்ள தீவுத்திடல் பகுதியை பொருட்காட்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

<<<>>>

மேற்குவங்கம், ஒடிசா மற்றும் ஜார்கண்ட் மாநிலங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழை முதல் அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கனமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படவும் வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

சத்தீஸ்கட், பீஹார், கிழக்கு மத்தியப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், சிக்கிம், பீஹார், உத்தரப்பிரதேசம், நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா, அசாம், மேகாலயா மாநிலங்களில் அடுத்த 2 நாட்களுக்கு அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடக்கு வங்கக்கடல் மற்றும் மேற்குவங்கம், ஒடிசா கடலோரப் பகுதிகளில் மீனவர்கள் அடுத்த 2 நாட்களுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<>>>

வெளிநாட்டைச் சேர்ந்தவர்களுக்கு வீடுகள் வாடகைக்கு விடுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை தில்லி காவல்துறை வெளியிட்டுள்ளது.

இதன்படி வெளிநாட்டவர்களுக்கான மண்டல பதிவு அலுவலகத்தில் வெளிநாட்டவர்கள் குறித்த விவரங்களை பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கு வரும் வெளிநாட்டவர்கள் 24 மணி நேரத்திற்குள் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாடகைக்கு விடும் விடுதியாளர்கள், சொத்து உரிமையாளர்கள், நிர்வாகிகள் மற்றும் மேலாளர்கள் வெளிநாட்டவர் குறித்த விவரங்கள் அடங்கிய பதிவேட்டை பராமரிக்க வேண்டும் என்றும், காவல்துறையினரின் அறிவுறுத்தலின்பேரில் அந்தப் பதிவேடுகள் சோதனைக்காக காவல் நிலையத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் அந்த வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

சர்வதேச அளவில் போதைப்பொருள் கடத்தல் தொடர்பான வழக்கில் சம்பந்தப்பட்ட ஆப்பிரிக்க நாட்டைச் சேர்ந்த 3 பேரை தில்லி சிறப்புக் காவல்துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் இருந்து 30 கோடி ரூபாய் மதிப்பிலான 8 கிலோ போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

<<<<>>>>

டைமன் லீக் தடகளப் போட்டியில் ஈட்டி எறிதலில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா வெள்ளிப் பதக்கம் வென்றார்.

பெல்ஜியம் தலைநகர் பிரஸல்சில் நடைபெற்ற இப்போட்டியில் அவர் 87 புள்ளி எட்டு ஆறு மீட்டர் தொலைவுக்கு ஈட்டி எறிந்து இரண்டாம் இடத்தைப் பிடித்தார்.

-----------------

செஸ் ஒலிம்பியாட் போட்டியின் நான்காவது சுற்றில் இந்திய ஆடவர் அணி செர்பியாவையும், மகளிர் அணி, பிரான்சையும் வென்றன.

ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்திய ஆடவர் அணி, 3 புள்ளி 5 – பூஜ்ஜியம் புள்ளி 5 என்ற புள்ளிக் கணக்கில் செர்பிய அணியை வென்றது.

இன்று நடைபெற உள்ள ஐந்தாவது சுற்று ஆட்டத்தில் இந்திய மகளிர் அணி - கஜக்ஸ்தான் அணியையும், இந்திய ஆடவர் அணி – அஜர்பெய்ஜான் அணியையும் எதிர்கொள்கின்றன.

--------------

ஆசியக் கோப்பை ஹாக்கி சாம்பியன் போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் இந்தியா – கொரியாவை எதிர்கொள்கிறது.

சீனாவில் உள்ள **Hulunbuir**-ல் நாளை இப்போட்டி நடைபெற உள்ளது.

மற்றொரு அரை இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் - சீனாவை எதிர்கொள்கிறது.

இதனிடையே தேசிய அளவிலான ஹாக்கிப் பயிற்சி முகாமில் பங்கேற்கவுள்ள 33 பேர் கொண்ட இந்திய மகளிர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

பெங்களூருவில் நடைபெறும் இந்தப் பயிற்சி முகாம், இன்று தொடங்கி அடுத்த மாதம் 9ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

வரும் நவம்பர் மாதம் பீஹாரில் நடைபெற உள்ள ஆசிய மகளிர் சாம்பியன் கோப்பைக்கான ஹாக்கிப் போட்டிக்கு அணியை தயார் செய்யும் வகையில் இந்தப் பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

-------------

வியட்நாம் ஓபன் பேட்மிட்டன் போட்டியில் கலப்பு இரட்டையர் பிரிவின் அரை இறுதி ஆட்டத்தில் இருந்து உடல்நிலை பாதிப்பு காரணமாக இந்தியாவின் துருவ் கபிலா – தனீஷா கிரஷ்டோ இணை வெளியேறியது.

-------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் கேரள அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

கொச்சியில் நடைபெறும் இப்போட்டி இன்றிரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் பெங்களூரு அணி - ஈஸ்ட் பெங்கால் அணியையும், சென்னை அணி – ஒடிசா அணியையும் வென்றன.

மும்பை – மோகன் பஹன் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

**<<<<The End>>>>**